குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக, நேற்றைய முன்தினம் நம்முடைய தலைமைப் பொறியாளர் (திருச்சி) அவர்களோடு தொடர்பு கொண்டு, — மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் பார்த்த மட்டிலே—உடனடியாக இதற்கு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள் என்று வினவிய நேரத்திலே, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளைச் சந்தித்து, மாற்று ஏற்பாடாக, அவர்கள் சொல்லியபடி, முறை வைத்து, மின்சார வினியோகத்தைத் தந்தால் முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்ததாகச் சொன்னார்கள். ஆகவே, இதுசம்பந்தமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு, திருச்சியிலே இருக்கின்ற நம்முடைய மின்துறையினுடைய தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே, மேற்பார்வைப் பொறியாளர்கள் இரண்டு பேரும்-நாகைப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய மேற்பார்வைப் பொறியாளரும், தஞ்சை மாவட்டத்தினுடைய மேற்பார்வைப் பொறியாளரும், இதற்கான நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக மின் அழுத்தம் குறைவில்லாமல் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை விவசாயப் பெருங்குடி மக்களுடைய மின்சாரப் பற்றாக்குறை கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, 1976-77 மற்றும் 1977-78-ஆம் ஆண்டுகளுக்கான, தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1987-88 ஆம் ஆண்டு, 54-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது, அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 40-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத்